# அரசறிவியல்

## அரசறிவியலை விளங்கிக்கொள்ளல்



e தக்ஸலாவ™ கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் : 1.1 அரசியலானது சமூக வாழ்க்கையின் இன்றியமையாத ஓர் அங்கமாகும் என்பதை விளக்குவார்.

## அசரறிவியலை விளங்கிக்கொள்ளல்




அரசியலைப் பற்றி பயிலும் கற்கைத்துறையான அரசறிவியல் சுமார் 25 நூற்றாண்டுகள் பழமை வாய்ந்ததாகும்.

கி.மு 4 ஆம் நூற்றாண்டில் கிரேக்கத்தின் எதென்ஸ் நகரில் பிளேட்டோவின் "அக்கடமி", அரிஸ்டோலின் "லைசியம்" ஆகிய கல்விக் கூடங்களில் அரசியல் என்ற பெயரில் ஆரம்பமாகிய இப்பாடம் இன்று அரசறிகழக மட்டங்களில் போதிக்கப்படுகின்றது.

அரசறிவியலின் கர்த்தாவாக **அரிஸ்டோட்டில்** இடம் பெறுகின்றார்.

அரசறிவியல் கற்கைத்துறை
① அரசியல்
② அரசறிவியல்
என இரு கருத்தியல்களை தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது.

அரசறிவியல் மேற்கொள்ளும் கற்றல் செயற்பாடுகள்.

- ஆய்வு செய்தல்
- பிரேரணைகளை முன்வைத்தல்
- விபரித்தல்
- பிரசைகளுக்கு அரசியல் அறிவூட்டல்
- விமர்சனத்துக்குட்படுத்தல்
- புதியகோட்பாடு, எண்ணக்கருக்களை உருவாக்கல்

அரசறிலியல் இயல்பு பாடப்பரப்பு, உள்ளடக்கம், விதிமுறைகளும் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும் விருத்தியடைந்து 25 நூற்றாண்டுகளாக கட்டியெழுப்பப்பட்டு, மாற்றமடைந்து அபிவிருத்தியடைந்து வருகிறது.

தொகுப்பு :- திருமதி.ற.பாலகரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி).
கணினி வடிவமைப்பு :- திரு.பா.சாயிரூபன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

அரசியலின் இரு கருத்தியல்கள்

1. அரசு, அரச நிர்வாகம் மற்றும் அரசாட்சி பற்றிய அடிப்படை எண்ணக்கரு
2. அரசுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அரசுக்கு வெளியே பிரசைகள் பங்குபெறும் சமூக பயன்பாடு

அரசியல் தொடர்பில் புராதன கிரேக்கத்திலும் இந்தியா மற்றும் சீன தத்துவவியலாளர்களும் அரசு மற்றும் அரச அதிகாரத்தை பயன்படுத்துவதோடு தொடர்புபடுத்தியே வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.

அரசியல் என்பது **கிரேக்க நகர அரசை** மையப்படுத்தி கருத்து வழங்கியுள்ளனர்.

இது இரு அர்த்தங்களை கொண்டுள்ளது.

I. அரசு மற்றும் அரசாட்சியோடு தொடர்புடைய விடயம்.

II. அரச செயற்பாடுகள் தொடர்பில் பிரசைகளின் கடமைகளினதும் பொறுப்புக்களினதும் செயற்பாட்டுத் தன்மை.

### I

- நகர அரசு தொடர்பான விடயத்தை ஆராயும் கலை / விஞ்ஞானமாக கருதப்படுகின்றது.
- புராதன இந்திய மற்றும் கொன்புயசும் தமது நூல்களில் அவ்வாறே கூறியுள்ளனர்.
- அரிஸ்டோட்டிலும் அரசாட்சி தொடர்பான ஆலோசனை வழங்குதலே அரசியல் என குறிப்பிடுவதோடு இது அரசியல் வல்லுனர்களின் கருமமொன்றாக இருந்தது என குறிப்பிட்டுள்ளார்.

### II

- கிரேக்கத்தில் பிரசைகளின் நேரடியான பங்குபற்றல் காணப்பட்டது. இதனை அரிஸ்டோட்டில் **"செயற்பாட்டு பிரசை"** என தனது நூலில் பயன்படுத்தியுள்ளார்.
- இதன்படி அரசியல் என்ற எண்ணக்கருவிற்கு விசேட இடம் கிடைத்துள்ளது. பிரசைகள் பங்குபற்றல் இல்லாத அரசொன்றை பார்க்க முடியாது என்ற அளவிற்கு அரசியலில் பிரசைக்கு உள்ள தொடர்பு வேரூன்றியுள்ளது எனலாம்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

1) அரசறிவியல் கற்கையாக தோற்றம் பெற்ற காலப் பகுதியையும் அந்நாட்டையும் குறிப்பிடுக.

........................................................................................................

........................................................................................................

2) அரசறிவியலின் கர்த்தா என கருதப்படுபவரையும் அரசியல் பாடமாக ஆரம்பிக்கப்பட்ட நகரத்தையும் குறிப்பிடுக.

........................................................................................................

........................................................................................................

3) கிரேக்க தத்துவ வாளிகளான பிளேட்டோவாலும் அரிஸ்ரோட்டிலினாலும் அரசியல் கற்பிக்கப்பட்ட கல்விக் கூடங்களை குறிப்பிடுக.

........................................................................................................

........................................................................................................

4) அரசறிவியல் இரு பிரதான கற்கைத்துறையூடாக வளர்ச்சியடைந்துள்ளது. அவ்விரு கற்கைத் துறைகளையும் குறிப்பிடுக.

........................................................................................................

........................................................................................................

5) புராதன இந்தியாவில், சீனாவில் அரசியல் என்ற சொல்லை பயன்படுத்திய தத்துவ ஞானி-களை முறையே குறிப்பிடுக.

........................................................................................................

........................................................................................................

Q1. அரசறிவியல் சமூகப் பயன்பாடொன்றான பாடமாக கருதப்படுகின்றது ஆராய்க.

விடைகள்

1. 4ம் நூற்றாண்டு, கிரேக்கம்
2. அரிஸ்டோட்டில், எதென்ஸ்
3. அக்கடமி, லைசியம்
4. அரசியல், அரசறிவியல்
5. கொடிலியர், கொன்புசியஸ்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk